**01. செபியின் தோற்றம்** இந்தியப் பத்திர மாற்றக வாரியம் (செபி) முதன் முதலில் 1988 ம் ஆண்டில் பத்திரங்கள், சந்தைப் பத்திரங்களை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டப்பூர்வமற்ற அமைப்பாக நிறுவப்பட்டது. 1992ம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றத்தில் தனி சட்டம் இயற்றப்பட்டு செபி ஒரு சுதந்திர அமைப்பாக செயல்படத் தொடங்கியது. இதன் தலைமையகம் மும்பையில் பாந்திரா குர்லா மாவட்டத்தின் வணிக வளாகத்தில் உள்ளது.

**02. செபியின் பிராந்திய அலுவலங்கள்.**

01.வடக்கில் புது டெல்லி
02.கிழக்கில் கொல்கத்தா
03.தெற்கில் சென்னை
04.மேற்கில் அஹமதாபாத்,

**03. செபியின் பொருள் தருக.**

இந்திய மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட உயர் அமைப்பு இந்தியப் பத்திர மற்றும் மாற்றங்களின் வாரியம் (செபி) ஆகும்.. 1988ல் உருவாக்கப்பட்ட செபி 1992ல் சட்டமுறை அதிகாரம் பெற்றது.

**04. செபியின் நிர்வாகம்.** செபி அதன் உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகிறது. இதில் இயக்குநர்கள், கூடுதல் இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், தொழில் நுட்ப இயக்குநர்கள் தொழில் நுட்ப உதவியாளர்கள் பிரிவு அலுவலர்கள் அடங்குவர்.

**05. செபியின் நோக்கங்கள் யாவை?**

01.பங்கு பரிவர்த்தனைகளின் ஒழுங்குமுறை: செபியின் முதன்மை நோக்கம் பங்குச் சந்தைகளை ஒழுங்குபடுத்துவது.

02.முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு. நிறுவனங்கள் தகவலறிக்கையில் தவறான தகவல்களை வழங்கியிருப்பின் அதிலிருந்து முதலீட்டாளர்களை பாதுகாக்கும்.

03.உள்வழி வியாபாரத்தை சரிபார்த்தல். இரகசிய தகவலைப் பயன்படுத்தி இயக்குநர்கள், தோற்றுவிப்பாளர்கள், மற்றும் பிற நபர்களால் மேற்கொள்ளப்படும் பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகள் உள்வழி வியாபாரம் எனப்படும். இது பொது முதலீட்டாளர்களின் நலனைப் பாதிக்கும். செபி இதனை சரிபார்க்க நடவடிக்கைகளை எடுக்கும்.

04.தரகர்கள் மீது கட்டுப்பாடு. தரகர்கள் மற்றும் இடைநிலையர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது செபின் மற்றொரு முக்கிய நோக்கம்.

**06. செபியின் பணிகள் விவரி.**

செபி சட்டமன்ற நீதிமன்ற மற்றும் நிர்வாகி போல மூன்று முக்கிய செயல்பாடுகளை செய்கிறது. இது விதிகளை வகுப்பது விசாரணை மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை நடத்துவது மற்றும் அது ஆணைகள் மற்றும் தீர்வுகளை இயற்றுகிறது.

01. போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் வாயிலாக முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கிறது. சிறிய முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாப்பதோடு நிதிச் சந்தை தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவிப்புகள் சிறு புத்தகங்களை வெளியிடுகிறது.

02. தரகர்கள் மற்றும் துணைத்தரகர்கள் ஆகியோர் நிதிச்சந்தையில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

03. பங்கு பரிவர்த்தனை விசாரணைகள், இடைத்தரகர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தும் அமைப்புகளை ஆய்வு செய்தல்.

04 .பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.

05. நிதி இடைத்தரகர்களால் மேற்கொள்ளப்படும் மோசடியான மற்றும் நியாயமற்ற முறைகளைத் தடை செய்கிறது.

06. பத்திரங்கள் சந்தையுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் இடைத்தரகர்கள் ஆகியோரின் பதிவு மற்றும் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது.

07. மூலதன வெளியீட்டில் ஈடுபட்டிருக்கும் தொழில்நிறுவனங்களுக்கு செபி வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகளை வெளியிடுகிறது.

08. முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான ஒருவழியாக நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கையகப்படுத்துதல்களை செபி ஒழுங்குபடுத்துகிறது.

09. பரஸ்பரநிதி போன்ற கூட்டுமுதலீட்டுத் திட்டங்களை செல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பணிகளை மேற்கொள்கிறது.

10. இடைத்தரகர்களின் சுய ஒழுங்குமுறை அமைப்பை ஊக்குவிக்கிறது. இடைநிலையர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்கவும் அவர்களது உறுப்பினர்களுக்கு ஏற்படும் தீங்கான செயல்களை கட்டுப்படுத்த நிதி இடைத்தரகர்களை ஊக்கப்படுத்துகிறது.

11.நிதி இடைத்தரகர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

12.இந்திய மைய அரசு செயல்படுத்தும் செயல்பாடுகளை செயல்படுத்துகிறது.

**07. செபியின் அதிகாரங்கள் யாவை? (Powers of SEBI)**

**01. பங்குச்சந்தை மற்றும் இடைத்தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்:** பங்கு மாற்றகங்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் ஆய்வு மற்றும் கூர்ந்தாய்வு மேற்கொண்டு தகவல்களைக் கேட்கும்.

**02 .நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்.** இடைத்தரகர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள் மீது வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதம் விதிக்கும்.

**03 .பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்க்கான அதிகாரம்.** இடைத்தரகர்களுக்கு வழிகாட்டுதல் வழங்குவது மற்றும் முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான விதிகளை அறிமுகப்படுத்த அதிகாரம் செபிக்கு உண்டு.

**04.பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்:** உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் செபிக்கு உண்டு

**05.பத்திரங்கள் ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள்** ஒவ்வொரு பங்குச் சந்தையிலும் ஆளும் குழுவில் மூன்று உறுப்பினர்களை நியமிக்க நிதி அமைச்சகம் செபிக்கு அதிகாரம் அளித்துள்ளது.

**06. பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம்.** பத்திரச் சந்தையில் இடைநிலையர்களின் மோசடி மற்றும் முறையற்ற வியாபார செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் செபிக்கு உண்டு.

**08.புறத்தோற்றமற்ற பத்திரங்கள் உருவாக்கம் (Dematerialization)**

காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லா பத்திரங்களை உருவாக்குவதே புறத்தோற்றமற்ற பத்திரங்கள் உருவாக்கம் எனப்படும்.

பத்திரங்கள் வைப்புதாரரால் முதலீட்டாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

முதலீட்டாளர்கள் வைப்பக பங்கேற்பாளர்களுடன் புறத்தோற்றமற்ற கணக்கு **(Demat Account** ) ஒன்றைத் தவக்கவேண்டும். பத்திரங்கள் கொள்முதல் அவர் கணக்கில் வரவு வைக்கப்படும் .பத்திரங்கள் விற்பனை அவருடைய demat கணக்கில் பற்று வைக்கப்படும். 1996ம் ஆண்டு டிசம்பர் மாதம் NSE முதன் முதலாக புறத்தோற்றமற்ற பத்திரங்கள் வர்த்தகத்தை தொடங்கியது. முதன் முதலாக ரிலையன்ஸ் நிறுவனம் 100 பங்குகளை புறத்தோற்றமற்ற பத்திரங்கள் விற்பனையில் ஈடுபட்டது. 1997 மும்பை பங்குச் சந்தை புறத்தோற்றமற்ற வர்த்தகத்தை தொடங்கியது.

**09. புறத்தோற்றமற்ற வர்த்தகத்தின் நன்மைகள்.**

01. இழப்பு , திருட்டு, மோசடி, மற்றும் சேதம் இதில் ஏற்படாது.
02 .விரைவான பரிவர்த்தனை,மற்றும் செயல்திறன் அதிகம் இருக்கும்
03 .பங்குப் பரிவர்த்தனைக்கு ஒரு வர்த்தகர் நிறுவனத்தோடு தொடர்பு கொள்ளத்தேவையில்லை.
04. முத்திரைத்தாள் கட்டணமில்லை.பரிவர்த்தனை செலவு குறைவு.
05. ஒரே **Demat** கணக்கில் பங்கு மற்றும் கடனீட்டுப்பத்திரங்களை வைத்திருக்க சில வங்கிகள் அனுமதிக்கின்றன.
06**. Demat** கணக்கு வைத்திருப்பவர் பங்குகளை வாங்க விற்க உச்ச வரம்பில்லை.
07 .வாடிக்கையாளார்கள் சேவை சிறப்பாக இருக்கும்.
08. தரகர் இன்றி வாடிக்கையாளார்கள் நேரிடையாக வர்த்தகம் செய்ய முடியும்.
09. கடன் வழங்குபவர்கள் டீமேட் கணக்கில் உள்ள பத்திரங்களின் மதிப்பை இணையாக எடுத்துக்கொண்டு கடன் வழங்க முன்வருவர்.
10. கணிணி இயக்கத்தில் வர்த்தகம் வசதியாக நடைபெறும்.

**10. புறத்தோற்றமற்ற கணக்கு (Demat Account) என்றால் என்ன?**

மின்னணு வடிவத்தில் பங்குகளை வாங்க அல்லது விற்பதற்காக ஒரு வாடிக்கையாளர் வைப்பக பங்கேற்பாளர்களுடன் துவக்கப்படும் ஒரு கணக்கே புறத்தோற்றமற்ற கணக்கு ஆகும்.

சாதாரண வங்கிக் கணக்கு போன்றது.

**11. புறத்தோற்றமற்ற கணக்கை எப்படித் தொடங்க வேண்டும்?**

01 புறத்தோற்றமற்ற கணக்கை தொடங்க விண்ணப்பத்துடன் தேவையான ஆவண நகல்களையும் இணைத்து அத்துடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
02 வாடிக்கையாளார்கள் விதிகள் வழங்கப்படும்.
03. வைப்பக பங்கேற்பாளர்களின் பிரதிநிதி படிவத்தை சரிபார்ப்பார்.
04. அதன்பின் வாடிக்கையாளருக்கு ஒரு கணக்கு எண் வழங்கப்படும். அல்லது இணையதள முகவரி வழங்கப்படும். அதிலிருந்து புறத்தோற்றமற்ற கணக்கை அணுகலாம்.

**12. புறத்தோற்றமற்ற கணக்கை துவங்க தேவைப்படும் ஆவணங்கள்.**

01. பாஸ்போர்ட் அளவு புகைப்படம்.
02. அடையாள சான்றிதழ் **(PAN CARD)** ஓட்டுநர் உரிமம், வங்கி செல் புத்தகம், மின்கட்டண இரசீது, தொலைபேசி கட்டண இரசீது, மத்திய மாநில அரசுகள் வழங்கிய புகைப்படம். ஒட்டிய சான்றிதழ்.)
03.முகவரி சான்றிதழ். (குடும்ப அட்டை, கடவுச் சீட்டு) **(Passport)** ஓட்டுநர் உரிமம்,வங்கி செல் புத்தகம், தொலைபேசி கட்டண இரசீது, மத்திய மாநில அரசுகள் வழங்கிய புகைப்படம். ஒட்டிய சான்றிதழ்.)

**13.நிரந்தர கணக்கு எண் PAN**

வருமான வரித்துறையினால் வழங்கப்படும் 10 இலக்க எண் எழுத்து புகைப்பட அடையாள அட்டை. இது அடையாள ஆதாரமாக செயல்படுகிறது.